## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.

## O.S. No. 125/2016

2025 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 12-ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் பி.சா.1 வாக்குமூலம் 1969 ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி திருமதி. A. சீதாலெட்சுமி, M.A.,B.L. மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் கூறப்பட்டு உறுதி கூறப்படுகிறது.

**நாள் : 12.02.2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சாந்தி | ஜாதி | : | |
| க/பெயர் | : | கண்ணன் | மதம் | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |
| வட்டம் | : | | வயது | : | |

பி.சா.1 முன்னிலை வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையின் விவரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். வாதி ராஜேஸ்வரியும் நானும் ஒரே ஊரைச்சேர்ந்த நபர்கள் என்பதால் அவர்களது குடும்ப விவரங்கள் எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். ராஜேஸ்வரியின் கணவர் பெயர் எனக்கு தெரியாது. ராஜேஸ்வரிக்கு திருகுமரன் என்ற ஒரு மகன் இருந்தார் என்றால் சரிதான். அவர் தற்போது உயிருடன் இல்லை என்றால் சரிதான். ராஜேஸ்வரி எந்த சொத்திற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சர்வே எண் எனக்கு தெரியாது. 2 ம் பிரதிவாதியான எனது கணவருக்கு தான் தெரியும். தாவா சொத்து ஆதியில் எனது கொழுந்தனார் கோவிந்தராஜன் பெயரில் இருந்தது. அதற்கு பிறகு வில்லங்க சான்று எடுத்த பிறகு தான் வாதியின் மகன் திருக்குமரன் பெயரில் இருந்தது தெரியவந்தது.

கடந்த 21.03.2007-ல் வாதியின் மகன் திருகுமரன் கிரையம் பெற்றுள்ளார் என்ற விவரத்தை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் கணவரான 2 ம் பிரதிவாதியை விசாரித்தால் முழு விவரம் தெரியும் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணம் திருகுமரன் என்பவரால் கோவிந்தராஜன் என்பவரிடமிருந்து கிரையம் வாங்கப்பட்ட ஆவணம் என்றால்

அதுப்பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தை எதற்காக தமிழரசன் என்பவர் எனது கணவருக்கு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொடுத்தார் என்றால் எனது கொழுந்தனார் கோவிந்தராஜன் தமிழரசன் மாமியார் ராஜேஸ்வரி என்பவரிடமிருந்து வாங்கிய அதே சொத்தை தான் தமிழரசன் என்பவர் எங்களுக்கு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொடுத்தார்.

தமிழரசனின் மாமியார் ராஜேஸ்வரிக்கு சொந்தமான சொத்தை தான் தமிழரசன் எனது கணவருக்கு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொடுத்தார் என்றால் சரிதான். எந்த தேதியில் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டதென்றால் கடந்த 2006 வருடம் ஆகும். தேதி சரியாக நினைவில்லை. தாவா சொத்தின் உண்மையான உரிமையாளராக திருகுமரன் மற்றும் ராஜேஸ்வரி ஆகியோர்களிடம் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொள்ளவில்லை என்றால் சரிதான். தமிழரசனின் மனைவிக்கு ஒதுக்கப்பட்ட பாகத்தை தான் எனது கணவருக்கு கிரைய ஒப்பந்தமாக ஏற்படுத்திக்கொடுத்துள்ளார்.

ராஜேஸ்வரி குடும்பத்தில் பாகபிரிவினை ஏற்பட்டது பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தமிழரசன் அவரது மாமியார் வீடான வாதியின் வீட்டில் தான் இருந்து வருகிறார். தமிழரசன் மனைவிக்கு ஒதுக்கப்பட்ட பாகம் குறித்த ஆவணங்கள் ஏதேனும் நான் பார்த்தேனா என்றால் இல்லை. தாவா சொத்து நாளது தேதிவரை எனது அனுபவத்திலுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து விவசாய நிலமாகும். நாளது தேதி வரையிலும் நான்தான் விவசாயம் செய்து வருகிறேன். வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையை நான் படித்து பார்த்துள்ளேன் என்றால் சரிதான். கடந்த 2006 ஆம் ஆண்டு முதல் எனது அனுபவத்தில் தான் உள்ளது.

வாதி கடந்த 29.02.2016-ல் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். அதற்கு நான் பதலறிவிப்பு அனுப்பியுள்ளேன். அந்த அறிவிப்கை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். திருகுமரன் கோவிந்தராஜ் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றுள்ள தாவா சொத்தை நான் அக்கிரமித்து வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. தமிழரசன் எனது கணவருக்கு ஏற்படுத்திக்கொடுத்த கிரைய ஒப்பந்த்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா

என்றால் தாக்கல் செய்துள்ளேன். அந்த கிரைய ஒப்பந்தம் அரவிந்தன், ராமநாத அய்யர், வீரையன் ஆகியோர்கள் முன்னிலையில் கிராமத்தில் ஏற்படுத்தப்பட்டது.

(வழக்கறிஞர் வேண்டுக்கோளிற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

District Munsif

Mannargudi.